**A**

# மூன்றாம் பருவத்தேர்வு – 2024

**வகுப்பு : 6**

## தொகுத்தறி மதிப்பீடு – உடற்கல்வி

**காலம் : 1.00 மணி** **மதிப்பெண்கள் : 40**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** **5 x 1 = 5**

1."நேர் நில்" என்பது

அ) ஆரநில் ஆ) திரும்புதல் இ) சாய்வு நிலை ஈ) நிமிர்ந்து நில்

2. மூச்சுப் பயிற்சி செய்ய உகந்த நேரம்

அ) அதிகாலை ஆ) உணவுக்குப் பின் இ) நண்பகல் ஈ) இரவு

3. பூப்பந்து விளையாட்டில் பந்தின் நிறம்

அ) வெள்ளை ஆ) மஞ்சள் இ) பச்சை ஈ) சிவப்பு

4. கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் மனித உறுப்பு எது?

அ) சிறுகுடல் ஆ) கல்லீரல் இ) நுரையீரல் ஈ) பெருங்குடல்

5. சதுரங்க விளையாட்டில் கறுப்பு சிப்பாய்களின்(பான்) எண்ணிக்கை.

அ) 6 ஆ) 9 இ) 7 ஈ) 8

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **5 x 1 = 5**

6. குட்டி கரணம் என்பது________________விளையாட்டுடன் தொடர்புடையது.

7. கபடி விளையாட்டுப் போட்டிக்கு மொத்தம் ________________வீரர்கள் தேவை.

8. பாரா ஒலிம்பிக் போட்டிகள் ________________வீரர்களுக்கு நடத்தப்படுகின்றன.

9. பத்மாசனம் என்பது ________________வடிவம்.

10. பிரக்ஞானந்தா ஒரு ________________விளையாட்டு வீரர்.

**III. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.** **5 x 1 = 5**

11.சிலம்பம் தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டு.

12. ஆகஸ்ட் 29 ஆம் தேதி தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

13. உணவுக்குப் பின் யோகாசனம் செய்யலாம்.

14. ஒலிம்பிக் கொடியின் வளையங்கள் கண்டங்களைக் குறிக்கின்றன.

15. நீளம் தாண்டுதலில், நீளம் தாண்டுபவர் மிதிப்பலகையைத் (Takeoff Board) தாண்டி மிதிக்கலாம்.

**IV. பொருத்துக.** **5 x 1 = 5**

| | | |
|---|---|---|
| 16. தேசிய யோகா தினம் | – | வேடனும் பறவையும் |
| 17. மகேந்திரசிங் தோனி | – | களப்போட்டி |
| 18. சிறந்த விளையாட்டு வீரர் | – | ஜூன் 21 |
| 19. நீளம் தாண்டுதல் | – | 2011 மட்டைப்பந்து உலகக்கோப்பை |
| 20. சிறு விளையாட்டு | – | அர்ஜுனா விருது |

**V. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளி** **5x 2 = 10**

21. 14 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான ஓட்டப் போட்டிகளை எழுதுக.

22. முதலுதவி என்றால் என்ன?

23. பூப்பந்தாட்ட ஆடுகளத்தின் நீளம் மற்றும் அகலம் என்ன?

24. "உலகத் திறனாய்வு போட்டியில்" நடத்தப்படும் திறனாய்வு போட்டிகள் யாவை?

25. பள்ளிக் கல்வித்துறையால் நடத்தப்படும் புதிய விளையாட்டுப் போட்டிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

26. அமர்ந்த நிலையில் செய்யக்கூடிய ஏதேனும் நான்கு ஆசனங்களின் பெயர்களை எழுதுக.

27. சரிவிகித உணவு என்றால் என்ன?

**VI. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2 x 5 = 10**

28. கபடி ஆடுகளம் படம் வரைந்து அதன் அளவுகளை எழுதுக.

29. உடல் தூய்மை மற்றும் பள்ளி தூய்மை பற்றி விவரி.

30. சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பற்றி விவரி.

www.Padasalai.Net